CHANGE LANGUAGE தமிழ்
WATCH LIVE TV
DOWNLOAD APP
FOLLOW US ON

NEWS18 தமிழ்நாடு

Trending Top

கொரோனா சினிமா ராசிபலன் லைஃப்ஸ்டைல் தமிழ்நாடு இந்தியா உலகம் விளையாட்டு வணிகம்

Latest News Trending Memes Tech Explainers Auto Jobs Education Album Video

CHOOSE YOUR DISTRICT

முகப்பு » செய்திகள் » தமிழ்நாடு » LAUNCH OF TAMIL NADU CHILDREN WRITERS ARTISTS ASSOCIATION EKR

# தமிழகத்தில் உதயமானது சிறார் எழுத்தாளர்கள் - கலைஞர்கள் சங்கம்!




தமிழகத்தில் உதயமானது சிறார் எழுத்தாளர்கள் - கலைஞர்கள் சங்கம்!

**குழந்தைகளின் முழுமையான ஆளுமை வளர்ச்சி சார்ந்து, குறிப்பாகக் கலை, இலக்கிய மேம்பாடு சார்ந்து செயல்படுவது இந்த சங்கத்தின் முதன்மையான நோக்கமாக உள்ளது.**

NEWS18 TAMIL

**LAST UPDATED :** JUNE 14, 2021, 21:41 IST

SHARE THIS:

தமிழில் சிறாருக்காக எழுதும் படைப்பாளிகள், செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள், கதைசொல்லிகள் இணைந்து தமிழ்நாடு சிறார் எழுத்தாளர்கள் – கலைஞர்கள் சங்கத்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கி இருக்கிறார்கள்.

குழந்தைகளின் முழுமையான ஆளுமை வளர்ச்சி சார்ந்து, குறிப்பாகக் கலை, இலக்கிய மேம்பாடு சார்ந்து செயல்படுவது இந்த சங்கத்தின் முதன்மையான நோக்கமாக உள்ளது. மேலும், அனைத்துக் குழந்தைகளும் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் கிடைக்க வேண்டும். இந்த நோக்கில் எழுத்து, கலை சார்ந்த முயற்சிகளில் சங்கம் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபடுதல்.

குழந்தைகளின் மீது செலுத்தப்படும் வன்முறை, ஒடுக்குமுறை, பாரபட்சமான அணுகுமுறை ஆகியவற்றுக்கு எதிராக எழுத்து, கலை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுதல், மரபு, வரலாறு, பொருளியல், அறிவியல், சூழலியல், அரசியல், பண்பாடு, கலைகள் சார்ந்து கடந்த காலம் - சமகாலத்தை வெளிப்படுத்தக்கூடிய குழந்தைகளுக்கான கலை, இலக்கியப் படைப்புகளைப் படைப்பது, வாசிப்பது, பரவலாக்குவது உள்ளிட்ட முயற்சிகளை முன்னெடுத்தல் ஆகியவை உட்பட குழந்தைகள் நலன் சார்ந்து பல நோக்கங்களை இந்த சங்கம் கொண்டுள்ளது.

**Follow @ Google News:** கூகுள் செய்திகள் பக்கத்தில் நியூஸ்18 தமிழ் இணையதளத்தை இங்கே கிளிக் செய்து ஃபாலோ செய்யுங்கள்..

## புகைப்படம்



'ஏட்டையா... இப்ப எதுக்கு என்னய பிடிச்சு உள்ள வச்சிருக்கீங்க'



நீரில் செல்லும் கார் அறிமுகம்: இந்திய மதிப்பில் விலை எவ்வளவு தெரியுமா



சென்னை மின்சார ரயில்களில் இன்று முதல் பொதுமக்கள் பயணிக்க அனுமதி...

இந்த அமைப்பின் மாநாடு இணையம்வழியே நடைபெற்றது. இந்த மாநாட்டுக்குத் தலைமையேற்ற எழுத்தாளர் உதயசங்கர், சங்கத்தின் தேவையையும் படைப்பாளிகள் ஒன்றிணைவதன் அவசியத்தையும் விளக்கினார். தொடர்ந்து பேசிய, சங்கப் பொதுச்செயலாளர் விழியன், குழந்தைகள் மீது எந்தவிதமான வன்முறை நிகழ்த்தப்பட்டால், அதற்கு எதிராகவும் குழந்தைகளின் நலன் சார்ந்தும் சங்கத்தின் குரல் ஒலிக்கும் என்று கூறியுள்ளார்.

**Published by:** Esakki Raja **First published:** June 14, 2021, 21:41 IST

Child children Writers Union